புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

# நாட்டுப்புற சட ங்கு மற்றும் வழிபாட்டுப் பாடல்களில் தொன்மை

**ஆய்வு நெறியாளர்**

**முனைவர் ந. சோழன்,**

**உதவிப்பேராசிரியர் மற்றும் நெறியாளர்,**

**தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,**

**தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),**

**திருப்பத்தூர் மாவட்டம்.635601.**

**ஆய்வு மாணவர்**

**சே. இராஜேஸ்வரி.**

**முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்.**

**தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,**

**தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),**

**திருப்பத்தூர் மாவட்டம் 635601.**

**(திருவள்ளுவர் பல்கலைக்கழகம் இணைவுப்பெற்றது)**

## முன்னுரை

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களாகும்.நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. சமுதாய வாழ்வின் ஒவ்வொரு படிநிலைக்கேற்ப மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து சடங்கு முறைகளுக்கும் பாடல்கள் உள்ளன. பாட்டினைப் போல் இன்பம் பாரின்மிசை இல்லையடா என்றார் பாரதி. இக்கட்டுரையானது

நாட்டுப்புற மக்களிடையே காணலாகும் சடங்கு மற்றும் வழிபாட்டுப் பாடல்களின் தொன்மைகளை நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் விளக்கப்படுகிறது.

**ஆய்வுச் சுருக்கம்**

நாட்டுப்புறப் பாடல்கள் என்பவை மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், தொழில்கள், சடங்குகள் மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்தும் கால கண்ணாடி ஆகும். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு சடங்குகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு சடங்குகள் செய்யும்போது பாடல்கள் பாடிவந்துள்ளனர். பிறப்பு காது குத்து பூப்பு திருமணம் மற்றும், இறப்பு சடங்குகளில் பாடப்படும் பாடல்களையும் இயற்கையின் மீது கொண்ட அச்சம் காரணமாக இயற்கையை வழிபட தொடங்கினர். நன்மையும் தீமையும் இயற்கையால் உருவானது என நம்பினர். ஞாயிறு சந்திரன்மழை மரங்கள் குறித்த வழிபாட்டுப் பாடல்களையும் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் இக்கட்டுரையானது விளக்க இருக்கிறது.

**கலைச்சொற்கள்:**

- வழிபாடு
- கங்கணம்
- சடங்கு
- மாராயம்

**சடங்குகளின் தொன்மை**

''தொன்மை தானே சொல்லுங் காலை உரையொடு புணர்ந்த பழமை மேற்றே". 1 ஒரு செயல் நன்மை விளைவிக்கின்றது என்று மக்கள் உணரும் நிலையில் அது பழக்கம் ஆகிறது. காலப்போக்கில் அறிவியல் கல்வி ஆகியவை காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும் போது அது சடங்காக மட்டும் நீள்கிறது. இச்சடங்கு முறைகள் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை நிகழ்கிறது. பிறப்புச் சடங்கு ,காதுகுத்து ,பூப்பு ,திருமணம் இறப்புச் சடங்கு என சடங்குகளைப் பலவகைப்படுத்தலாம்.

**தாலாட்டுப் பாடல்களில் பிறப்புச் சடங்குகள்**

நாட்டுப்புற மக்களால் பல்வேறு வகையான வாழ்வியல் சடங்குகள் காலம் காலமாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அவற்றில் பிறப்புச் சடங்கு குறிப்பிடத்தக்கவை ஆகும். மக்களின் வாழ்வில் மாபெரும் செல்வமாக போற்றப்படுவது மக்கள் செல்வம் ஆகும். பெரும வற்றில் யாமறிவது இல்லை அறிவறிந்த மக்கட் பேறு நல்ல பிற திருக்குறளில் மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் மக்கள் செல்வத்தின் பெருமையை சொல்லியுள்ளார். இம்மக்கட்ச் செல்வத்தை காக்க செய்யப்படும் சடங்குகளை பிறப்புச் சடங்குகள் எனப்படுகின்றன. பிறப்புச் சடங்கில் சேனை தொடுதல் தொட்டில் இடுதல் காதுகுத்தல் ஆகியவை சடங்குகள் நாட்டுப்புற மக்களின் வாழ்வில் சிறப்பிடம் பெறுகின்றது.

குழந்தைகளுக்கு காது குத்துவதை ஒரு விழாவாகவே கொண்டாடும் வழக்கம் இருந்து வருகிறது. குழந்தைகளை கண்டு எமன் ஆசை கொள்வான் என்றும் குழந்தையின் உடலில் சிறுகாயம் ஏற்படுத்தி விட்டால் எமன் ஏமாந்து குழந்தைகளுக்கு தீங்குச் செய்ய மாட்டான் என்றும் நம்புகின்றனர் .இந்த நம்பிக்கையை விழாவிற்கு அடிப்படை காரணம் என தெரிகிறது.

காது குத்த வரும் தாய்மாமன் பொன்நாழி சிமிக்கி மதுரையில் கோர்க்கப்பட்ட மாலை ஒரு கூடை அரிசி போன்றவை கொண்டு வந்தான் என்பதைதாலாட்டுப்பாடலில்.

முத்தழக்க நாழி
மொதல் அளக்கப் பொன் நாழி
வச்சி அளக்கச் சொல்லி
வரிசையிட்டார் தாய்மாமன்
மலரா சிமிக்கிக்கொண்டு
மாமதுரை மாலை கொண்டு
கூட அரிசி கொண்டு
குலுங்கி வாரார் உங்க மாமன் (தமிழர் நாட்டுப் பாடல்கள்2)

காது குத்த வரும் தாய்மாமன் பொன்நாழி சிமிக்கி மதுரையில் கோர்க்கப்பட்ட மாலை ஒரு கூடை அரிசி போன்றவை கொண்டு வந்தான் என்பதை தாலாட்டுப்பாடலில்

நம்பிக்கை அல்லது சமய அடிப்படையில் நடைபெற்றாலும் காதுகுத்து சடங்கானது இன்றும் கொண்டாடி வருவதைக் காணமுடிகின்றது முடிகிறது.

**கொண்டாட்ட பாடல்களில் பூப்பூச்சடங்குப் பாடல்கள்**

கொண்டாட்டப் பாடல்கள் மனிதன் தன் மகிழ்ச்சியினை ஆடியும் பாடியும் பலரோடு கலந்து கொண்டாடுகின்றான். மனிதன் தன் மகிழ்வினை பாட்டாகவும் கூத்தாகவும் வெளியிடுகின்றான்.சு.சக்திவேல். மனிதனுடைய மனமானது ஆடல் பாடல்களை ஈடுபட விளைவது இயற்கையாகும். பலர் இணைந்து ஆடும் கும்மி கோலாட்டம் போன்ற பாடல்களும் பெரும்பாலும் சமூகத்தில் உள்ள பலரும் இணைந்து குழுவாகப் பாடப்படுவது .

மங்கை பெரியவள் ஆனால் முதன் முதலில் மாமனுக்குத்தான் 'மாராயம்' சொல்லி மற்ற சடங்குகள் மேற்கொள்ளப்படும். இளமகள் ஒருத்தி வயதுக்கு வந்து விட்டாள் பூப்பெய்தினால் அவளது முறைமாமனுக்கு பூப்படைந்த செய்தியை தெரிவித்து பின்பு நீராட்டி தாய்மாமன் தேங்காய் உடைத்து பெண்ணை பச்சை ஓலையால் அமைத்த கூட்டில் விடுவார்கள். இளமங்கைகள் குரவையாடி மகிழ்வுறுத்துவர் கும்மியின் பாடு பொருள் அச்சடங்கை விவரிக்கும்.

கும்மியடி நல்லா கும்மியடி

அம்மா குனிஞ்சு நல்லா கும்மியடி

கொளத்தங்கர ஓரத்திலே

பொண்ணு குந்தி இருக்கா

நல்லா கும்மியடி

பதினாறு நாளும் திட்ட நீக்க

மாமனும் மச்சானும்

சீராட வாராங்கோ

கெட்டி மேளமும்

கொட்டிட வாராங்கோ (தமிழர் நாட்டுப் பாடல்கள்3)

சடங்கான பெண்ணுக்கு ஏற்படும் பயத்தை போக்கவும், தாய்மாமனின் முக்கியத்துவத்தையும், மற்றும் சீர்வரிசை செய்யும் வழக்கத்தையும் எடுத்துரைக்கின்றது. பூப்புச் சடங்கின் தொன்மையை இன்றும் மாறாமல் பின்பற்றி வருவதை காண முடிகிறது.

**கொண்டாட்ட பாடல்களில் திருமணச் சடங்கு பாடல்கள்**

திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர் என்று கூறப்படுவது உண்டு. திருமணம் நடைபெறும்போது செய்யப்படும் சடங்கு முறைகளான பரிசம் போடுதல், முகூர்த்த கால் நடுதல் ,காப்பு கட்டுதல் ,தாலி கட்டுதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். எந்த ஒரு நல்ல காரியத்தையும் தொடங்குவதற்கு முன் தீய சக்திகள் நோய்கள் இடையூறு ஏற்படாமல் இருக்க காப்பு கட்டுவார்கள். திருமணம் நடைபெறும் போது மணமக்களுக்கு காப்பு கட்டுவது

களரி வைத்துக்
கங்கணம் கட்டினார்
குலவிளக்கு தங்கம்
குணமுடன் தரித்து
கொப்பேறி கொட்டி
குல தேவதையைத் தானழைத்து
செப்பமுடன் மன்னவருக்கு திருநீறு காப்பணிந்து (தமிழர் நாட்டுப் பாடல்கள்4)

திருமணம் நடைபெறும் போது மணமக்களுக்கு காப்பு கட்டும் சடங்கினை இப்பாடல் வழி அறிய முடிகிறது. மேலும் காப்பு கட்டும் சடங்கானது திருமண நிகழ்வின் தொடக்கத்தையும், புனிதத்தையும் குறிக்கும் ஒரு சடங்காகப் பார்க்கப்படுகிறது.

**ஒப்பாரி பாடல்களில் இறப்புச் சடங்கு**

இறந்தவர்களை நினைத்து அவர்கள் மீது பாடப்படும் பாடல்களே ஒப்பாரி பாடல்கள் ஆகும்.இறந்தவர்களின் இழப்பை எண்ணி இருந்தவர்களையும் தம்மையும் ஒப்பிட்டுப் பாடுவதும் ஒப்பரியாகும்.ஒப்பாரி பாடல்களில் இறந்தவர்களை மட்டும் பாடாமல் இருந்தவர்களுக்கு செய்யும் சடங்குகளையும் பாடியுள்ளனர். இறந்தவர்களுக்குச் செய்யும்

சடங்குகளை ஈமச்சடங்குகள் ஈம கிரியைகள் என்று வழங்கப்படுகின்றன. மேலும் இறப்புச் சடங்கில் நிர்மாலைஎடுத்தல் குடம் உடைத்தல் கொள்ளி வைத்தல் போன்ற சடங்கு முறைகள் இறந்தவரின் ஆண் வாரிசெய்யும் பெண் வாரிசையும் அடையாளம் காட்டும் முகமாக அமைகின்றன. அந்தவகையில் ஒரு பெண் பாடும் ஒப்பாரி பாடலில் இறப்பின் போது தனக்கு செய்ய வேண்டிய சடங்கு களைச் செய்ய பிள்ளை இல்லை என்பதை

முட்டாங்கால் தண்ணியில
முத்தப் பதிச்சிவச்சேன்
முத்தெடுக்கப்பிள்ளை யுண்டோ
உனக்கு முடியிறக்க பிள்ளை இல்லை
சுரண்டக்கால் தண்ணியில
காசப்பொதச்சி வச்சேன்
காசெடுக்கப் புள்ளையுண்டோ உனக்கு
கருமம் செய்ய புள்ளயில்லை (தமிழர்நாட்டுப்பாடல்கள்5)

மேற்கண்ட ஒப்பாரி பாடலில் இறப்புச் சடங்கின் தொன்மையையும் பிள்ளை இல்லாததால் இறந்த பிறகு செய்யும் சடங்குகளை செய்ய யாரும் இல்லை என்பதையும் பிள்ளைப்பேற்றின்
முக்கியத்துவத்தையும் இப்பாடல் வரிகள் விளக்குகிறது.

**வழிபாடு என்பதன் விளக்கம்**

வழிபாடு என்பது மக்களையும் இறைவனையும் இணைக்கும் பாலமாகும். வழிபாடு என்ற சொல்லுக்கு வணங்குதல் தொழுதல் துதித்தல் போற்றுதல் என்பது பொருள் இதுவென்று குறிப்பிட இயலாத ஓர் உயர் சக்தியை மனதில் ஒருமைப்படுத்தி இரு கரங்களையும் கூப்பி மற்றும் கூட்டி வணங்குதல் வழிபாடாகும்.'' இயற்கையிடமும் மரணத்திற்கு பின் வரும் நிலைமையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படை காரணம் ஆகும்'' என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுவது இவன் சுட்ட தக்கதாகும். குறிப்பிட்ட கடவுளையோ தெய்வங்களையோ போற்றி கிராம புற மக்களின் அன்றாட வாழ்வு உழைப்பு இயற்கை பண்டிகைகள் விழாக்கள் மழை அழைப்பு போன்றவற்றின் பின்னணியில் உருவான பாடல்களை இயற்கை வழிபாட்டுப் பாடல்கள் ஆகும்.

**இயற்கை வழிபாட்டுப் பாடல்கள்**

இயற்கையின் மீது கொண்ட அச்சம் காரணமாக இயற்கையை வழிபட தொடங்கினர் நன்மையும் தீமையும் இயற்கையால் உருவானது என் நம்பினர். ஞாயிறு சந்திரன் மழை மரங்கள் காற்று நெருப்பு பறவைகள் மற்றும் விலங்குகள் ஆகியவற்றை வணங்குவது இயற்கை வழிபாடாகும்.

இயற்கை வழிபாட்டில் ஒன்று வானத்துடன் தொடர்புடைய வருணனை மழை பொய்க்கும் காலங்களில் மழை பெய்ய வேண்டி மலைக்கஞ்சி என்ற சடங்கு நடத்தி வழிபடுகின்றனர் அப்போது வர்ணனை போற்றி துதி பாடல்களை பாடுகின்றனர்.

ஓடி வெதச்ச கம்பு
ஐயோ வருண தேவா
ஊடுவந்து சேரலையே
பாடி வெதச்ச கம்பு
ஐயோ வருண தேவா
பானை வந்து சேரலையே. (தமிழர்நாட்டுப்பாடல்கள்6)

பருவ மழை இன்றி வானம்பொய்த்து விட்டால் ஏற்படும் உண்மையான தாக்குதலுக்கு எல்லோரையும் விட முதலில் பாதிக்கப்படுவது மண்ணை நம்பி இருக்கும் விவசாயி தான். மழை இல்லாத காலத்தில் ஓடி ,பாடி விதைத்த பயிர்கள் வீடுவந்து சேரவில்லை என்று கன்னிப் பெண்கள் வர்ணனை வேண்டி பாடும் பாடல்கள் மூலம் வருண வழிபாடு இருந்துள்ளது என்பதை இப்பாடல்கள் வழி அறிய முடிகிறது.

**ஞாயிறு வழிப்பாடு**

ஞாயிறு வழிப்பாடு தொண்டு தொட்டு இருந்து வரும் வழிபாடாகும் மனித இனம் உயிர் வாழவும் இயங்கவும் சூரிய ஒளி இன்றியமையாததாகும். ஒளியை தரவும் வேளாண்மைக்கு அடிப்படையாக விளங்குகின்ற சூரியனுக்கு நன்றி பாராட்டவும் ஒவ்வொரு ஆண்டும் தைத்திங்கள் முதல் நாளன்று சூரியன் பொங்கல் என படையல் இட்டு வணங்குகின்றனர்.

அறுவடை செய்த தானியங்களைக் கதிரவனுக்கு படைத்துப் பொங்கலுக்கு வழிபடுகின்றனர்

இன்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் விரதம் இருந்து கதிரவனை வழிபடும் பழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது.

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' சிலப்பதிகாரம் பாடல் அடிகளில் சூரிய வழிபாடு குறித்து எடுத்துரைக்கின்றது. 'சந்திரரே சூரியரே சாமி பகவானே' பாடல்கள் வழி சூரிய வழிபாடு இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**நீர் வழிப்பாட்டு பாடல்கள்**

ஆற்று நீர் குளத்து நீர் கடல் நீர் ஆகியவை மக்களால் வழிபடுகின்றனர். நீர் வானத்தின் வண்ணத்திற்கு ஏற்ப தம்முடைய நிறத்தை மாற்றிக் கொள்வதாகவும் நீர் உலகத்தையும் மனிதையும் பிரதிபலிப்பதாகவும் மக்கள் கருதினர்.

கரைபுரண்டு ஓடுது அம்மா
அந்த காவிரியில் தண்ணீர் எங்கும்
நீல வண்ண தண்ணி எல்லாம்
சுழி சுழியா ஓடுதம்மா அந்த சுத்தமான ஆத்துத்தண்ணி (தமிழர்நாட்டுப்பாடல்கள்) 7

**முடிவுரை**

மரபு வழிபட்டு பின்பற்றப்படும் வழக்கங்கள் மனிதனுக்கு நன்மையை விளைவிக்கின்றது என்று நம்புகின்ற நிலையில் அது சடங்காக நடைபெறுகின்றது சடங்கு முறைகள் மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை காணப்படுகின்றன. குழந்தையின் உடலில் சிறு காயம் ஏற்படுத்தி விட்டால் எமன் குழந்தைக்கு தீங்கு செய்ய மாட்டான் என்ற நம்பிக்கையில் அடிப்படையில் தாய்மாமன் மடியில் காதுகுத்து நடைபெறுவதையும் தாய்மாமன் செய்யும் சீர்களையும் தொன்றுதொட்டு மாறாமல் இருந்து வருகிறது.திருமணச் சடங்கு முறையில் கணவன் மனைவி என்ற உறவு முறை சமுதாயத்தின் மத்தியில் உறுதி செய்யப்படுகிறது. முடியிறக்குதல் கருமம் செய்தல் குடமுடைத்தல் முதலிய இறப்புச் சடங்குகள் இறந்தவரின் ஆண் வாரிசையும் பெண் வாரிசையும் அடையாளம் காட்டும் முகமாக அமைந்துள்ளன. வழிபாட்டுப் பாடல்களில்

இயற்கை வழிபாடுகளான ஞாயிறு நீர் மற்றும் மழை பாடல்களின் மூலம் தொன்மை சடங்குகளையும் வழிபாடுகளையும் இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. திருஞானசம்பந்தம் ச. தொல்காப்பியம் பொருள் அதிகாரம் மூலமும் உரையும் செய்யுளியல் பக்கம் 353. கதிர் பதிப்பகம் .திருவையாறு
2. வானமாமலை. நா, தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள் ப.115
3. மேலது பா.எண்.7
4. மேலது ப. 290
5. மேலது ப.470
6. மேலது ப.69
7. வானமாமலை. நா, தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள் ப.74